DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.562/2018**

**P.W.18**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

NAME : மணிகண்டன்

Father Name : ராமசந்திரன்

VILLAGE :

CALLING :

AGE : 39

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.02.2026.

( 1, 2 மற்றும் 7எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டார்கள். 11வது எதிரி இறப்பு. 3, 4, 5, 6, 9, 10, 12, 13, 14, 15, 16, 17 மற்றும் 18 எதிரிகள் ஆஜர். 8வது எதிரி ஆஜர் இல்லை. 8வது எதிரி சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>

நான் தற்போது சென்னை ஆயுதபடையில் காவலராக வேலை செய்து வருகிறேன். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நானும், எதிரி சபா ரத்தினமும் எபிடி துரைராஜ் மேல்நிலைபள்ளி அனுப்பானடியில் சேர்ந்து படித்தோம். போலீஸார் என்னை விசாரணை செய்தார்கள். நாங்கள் இருவரும் சேர்ந்து படித்த விபரத்தை சொன்னேன்.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :</u>

சம்பவ சமயம் நான் சென்னை மாநகர காவல்துறையில் ஆயுத படையில் போலீஸாராக வேலை பார்த்து வந்தேன் என்றும், கடந்த 31.01.2013ம் தேதி என் நண்பரின் இறப்பு ஊர்வலத்தில் கலந்துகொள்ள மதுரைக்கு வந்திருந்தேன்

என்றும், இறந்து போன நண்பர் பெயர் வீரமணி என்பதாகும். அவருக்கும் அவர் மனைவிக்கும் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக துாக்குபோட்டு இறந்து கொண்டார் என்றும், தகனம் செய்த பிறகு வீரமணி வீட்டாருக்கும், வீரமணியின் மனைவி வீட்டாருக்கும் தகராறு ஏற்பட்டது என்றும் எனக்கும் அடி விழுந்ததால் பக்கத்தில் சபா ரத்தினத்தின் வீடு இருந்ததால், அவரை அழைத்தேன் என்றும், அதற்குள் கீரைத்துறை போலீஸார் அங்கு வந்துவிட்டார்கள் என்றும், சுமார் இரவு 08.15 மணியளவில் அளவில் நான் என் வீட்டின் அருகே உட்கார்ந்திருந்த போது சபா ரத்தினம் எனக்கு போன் செய்து பொட்டு சுரேஷை கொன்றுவிட்டோம் என்று செலவிற்கு பணம் வேண்டும் என்று என்னிடம் கேட்டார் என்றும், ஒரு பையனை அனுப்பி வைக்கிறேன் என்றும், ரூபாய் ஐய்யாயிரம் கொடுத்து அனுப்பு என்று சொன்னார் என்றும், எனக்கு அந்த பையன் போன் செய்து உங்களிடம் சபா பணம் வாங்கி வரச்சொன்னார் என்றும், நான் தினமணி தியேட்டர் பக்கம் வந்துவிடு பணம் தருகிறேன் என்று சொன்னேன் என்றும், அந்த பையன் அங்கு வந்தார் என்றும், அவரிடம் ரூபாய் ஐயாயிரம் பணம் கொடுத்தேன் என்றும், இது விஷயமாக எஸ் எஸ் காலனி காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்றும் நான் அப்போது சென்னையில் பணி செய்வதாக சொன்னேன் என்றும், சபா ரத்தினத்தை எப்படி தெரியும் என்று கேட்டார் என்றும், நான் அவருடன் பள்ளியில் ஒன்றாக படித்தவர் என்று சொன்னேன் என்றும், நண்பர் என்பதால் அவர் வரும் போது பணம் ரூபாய் ஆயிரம் அல்லது ஐநுாறு கொடுப்பேன் என்றும், உடன் படித்த நண்பர் என்பதால் அவருடன் பழகியவன் என்று போலீஸ் விசாரணையில் கூறி 08.02.2013ம் தேதி காவல்நிலையத்தில் சபா என்ற சபா ரத்தினத்தையும், சந்தானத்தையும் அடையாளம் காட்டினேன் என்று போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது

உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.</u>**

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.02.17 15:24:41 +0530

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**

மதுரை.